
இயல் எட்டு

அறம், தத்துவம், சிந்தனை

# என்தலைக் கடனே



## கற்றல் நோக்கங்கள்

- தமிழரின் சிந்தனை மரபுகளை உணர்தல்
- தமிழ் இலக்கியங்கள் காட்டும் அறச் சிந்தனைகளை அறிந்து, அறத்தோடு வாழும் வாழ்வியல் திறன் பெறுதல்
- கடித இலக்கிய வகையைப் படித்துப் பொருளுணர்ந்து எழுதுதல்
- பிற நாட்டு அறிஞர்களின் தத்துவங்களைத் தெரிந்துகொள்ளுதல்
- செய்யுள் உறுப்புகளை யாப்பிலக்கணம் வழி அறிந்து, அலகிடல்



9th_Tamil_Pages 122-264.indd 209 23-01-2020 20:21:18

உரைநடை உலகம்

அறம்

அ

# பெரியாரின் சிந்தனைகள்

நுழையும்முன்


சமூகம், செம்மாந்து சீர்மையுடன் திகழப் பாகுபாடுகளற்ற மனவுறுதி படைத்த மக்கள் தேவை. அத்தகைய மக்களை உருவாக்கப் பகுத்தறிவு இன்றியமையாதது. பாகுபாட்டு இருளுக்குள் சிக்கித் திணறிக்கொண்டிருந்த தமிழக மக்களைத் தம் பகுத்தறிவு ஒளியால் வெளிக்கொணரப் பாடுபட்டோருள் முதன்மையானவர்; இருபதாம் நூற்றாண்டில் ஈரோட்டில் தோன்றிப் பகுத்தறிவு, தன்மதிப்பு (சுயமரியாதை) ஆகிய கண்களை மக்களுக்கு அளிக்க அரும்பணியாற்றியவர். யார் அவர்?

LLBF1R

## தந்தை பெரியார்

வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் பலவாறு சிறப்பிக்கப்படுபவர் தந்தை பெரியார்; மூடப்பழக்கத்தில் மூழ்கிக் கிடந்த தமிழ் மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றவர்; அடிமையாய் உறங்கிக் கிடந்த சமூகம் விழிப்பதற்குச் சுயமரியாதைப் பூபாளம் இசைத்தவர்; மானமும் அறிவும் கொண்டவர்களாகத் தமிழர்கள் வாழவேண்டும் என்று அரும்பாடுபட்டவர்; தானே முயன்று கற்று, தானாகவே சிந்தித்து அறிவார்ந்த கருத்துகளை வெளியிட்டவர்.



## பகுத்தறிவு

'பெரியார்' என்றவுடன் நம்முடைய நினைவுக்கு வருவது, அவரின் பகுத்தறிவுக் கொள்கை. எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்பி, அறிவின்வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவாகும்.

முன்னோர்கள் செய்தார்கள் என்பதற்காகவே ஒரு செயலை அப்படியே



9th_Tamil_Pages 122-264.indd 210 23-01-2020 20:21:18



பின்பற்றி இன்றும் கடைப்பிடித்தல் கூடாது. அக்காலத்திற்கு ஏற்ற வகையில் அப்படிச் செய்திருப்பார்கள்; இன்று காலம் மாறிவிட்டது. இக்கால வளர்ச்சிக்கு ஏற்ப அறிவு நிலையில், நடைமுறைக்கேற்ற வகையில் செயல்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்துடனே பெரியார் சிந்தித்தார். சமூகம், மொழி, கல்வி, பண்பாடு, பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் அவரின் சிந்தனை புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.

### சமூகம்

தந்தை பெரியார் வாழ்ந்த காலத்தில் சமூகத்தில் சாதி சமயப் பிரிவுகள் மேலோங்கி இருந்தன. பிறப்பின் அடிப்படையில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேறுபாடுகள் இருந்தன. சாதி என்னும் பெயரால் ஒருவரை ஒருவர் இழிவு செய்யும் கொடுமை இருந்தது. இந்த இழிநிலை கண்டு தந்தை பெரியார் கொதித்தெழுந்தார். "சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது. மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்கிறது. மனிதர்களை இழிவுபடுத்துகிறது. அந்தச் சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும்" என்றார் அவர்.

சாதியினால் மனித வாழ்விற்கு எவ்விதச் சிறு பயனும் விளையப் போவதில்லை. அதனால் வீண் சண்டைகளும் குழப்பங்களுந்தான் மேலோங்குகின்றன. அத்தகு சாதி, மனிதனுக்குத் தேவையில்லை என்று வலியுறுத்தினார்.

### மதம்

'மதங்கள் என்பன மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கே ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இன்று மதத்தின் நிலை என்ன? நன்கு சிந்தித்துப் பாருங்கள்; மனிதர்களுக்காக மதங்களா? மதங்களுக்காக மனிதர்களா? மதம் என்பது மனிதர்களை ஒற்றுமைப்படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா?' எனப் பெரியார் பகுத்தறிவு வினாக்களை எழுப்பினார்; கடவுள் மறுப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தார்.

### கல்வி

சமூக வளர்ச்சிக்குக் கல்வியை மிகச் சிறந்த கருவியாகப் பெரியார் கருதினார். 'கற்பிக்கப்படும் கல்வியானது மக்களிடம் பகுத்தறிவையும், சுயமரியாதை உணர்ச்சியையும், நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும்; மேன்மை வாழ்வு வாழ்வதற்கேற்ற தொழில் செய்யவோ அலுவல் பார்க்கவோ பயன்பட வேண்டும்' என்றார். 'அறிவியலுக்குப் புறம்பான செய்திகளையும் மூடப்பழக்கங்களையும் பள்ளிகளில் கற்றுத் தரக்கூடாது. தற்சிந்தனை ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் வளர்க்கும் கல்வியினைக் கற்றுத்தர வேண்டும்' என்று பெரியார் கூறினார்.

சமூகத்தின் அனைத்து நிலையினருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே கல்வி உரிமையானது எனவும் சில பிரிவினர்க்குக் கல்வி கற்க உரிமை இல்லை எனவும் கூறப்பட்ட கருத்துகளைப் பெரியார் கடுமையாக எதிர்த்தார். அனைவருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும். குறிப்பாகப் பெண்களுக்குக் கல்வியறிவு புகட்ட முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றார். பெண்களுக்கு அளிக்கப்படும் கல்வியினால் சமுதாயம் விரைவாக முன்னேறும் என்று



9th_Tamil_Pages 122-264.indd 211 23-01-2020 20:21:18

**பெரியார் எதிர்த்தவை...**

இந்தித் திணிப்பு

குலக்கல்வித் திட்டம்

தேவதாசி முறை

கள்ளுண்ணல்

குழந்தைத் திருமணம்

மணக்கொடை

பெரியார் நம்பினார். மனப்பாடத்திற்கு முதன்மை அளிக்கும் தேர்வு முறையையும், மதிப்பெண்களுக்கு முதன்மை அளிக்கும் முறையையும் பெரியார் கடுமையாக எதிர்த்தார்.

## மொழி, இலக்கியம்

'ஒரு மொழியின் தேவை என்பது, அதன் பயன்பாட்டு முறையைக் கொண்டே அமைகிறது; இந்தியாவிலேயே பழமையான மொழி தமிழ் மொழியாகும். இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் தமிழில் படைக்கப்பட வேண்டும்' என்று கூறினார்.

'மொழியோ நூலோ இலக்கியமோ எதுவானாலும் மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும்' என்று கருதி மொழி, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சி குறித்தும் பெரியார் ஆழ்ந்து சிந்தித்தார்.

மதம், கடவுள் ஆகியவற்றின் தொடர்பற்ற இலக்கியம், யாவருக்கும் பொதுவான இயற்கை அறிவைத் தரும் இலக்கியம், யாவரும் மறுக்க முடியாத அறிவியல் பற்றிய இலக்கியம் ஆகியவற்றின் மூலம்தான் ஒரு மொழியும் அதன் இலக்கியங்களும் மேன்மை அடையமுடியும்; அத்துடன் அவற்றைப் பயன்படுத்தும் மக்களும் அறிவுடையவராக உயர்வர் என்று பெரியார் கூறினார்.

திருக்குறளில் அறிவியல் கருத்துகளும் தத்துவக்கருத்துகளும், அனைவருக்கும் பொதுவான வகையில் இடம் பெற்றிருப்பதால் அதை மதிப்புமிக்க நூலாகப் பெரியார் கருதினார். இந்நூலில் அரசியல், சமூகம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தும் அடங்கியுள்ளன; இதை ஊன்றிப் படிப்பவர்கள் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள் என்றார்.

## எழுத்துச் சீர்திருத்தம்

மொழியின் பெருமையும் எழுத்துகளின் மேன்மையும் அவை எளிதில் கற்றுக் கொள்ளக்கூடியனவாக இருப்பதைப் பொறுத்தே அமைகின்றன. எனவே, காலவளர்ச்சிக்கேற்பத் தமிழ் எழுத்துகளைச் சீரமைக்கத் தயங்கக் கூடாது என்று பெரியார் கருதினார். "மொழி என்பது உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும்; அக்கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும்; அவ்வப்பொழுது கண்டுபிடித்துக் கைக்கொள்ள வேண்டும்" என்றார். அம்மாற்றத்திற்கான முயற்சியையும் பெரியார் மேற்கொண்டார்.

உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார் (ஐயா – அய்யா, ஔவை – அவ்வை). அதுபோலவே, மெய்யெழுத்துகளில் சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்றார்; அவ்வாறு குறைப்பதால் தமிழ்மொழி கற்பதற்கும் தட்டச்சு செய்வதற்கும் எளிதாகும்

| வ.எண் | பழைய வடிவம் | புதிய வடிவம் |
|---|---|---|
| 1 | ணா | ணா |
| 2 | ணை | ணை |
| 3 | ணொ | ணொ |
| 4 | ணோ | ணோ |
| 5 | லை | லை |
| 6 | ளை | ளை |
| 7 | றா | றா |
| 8 | றொ | றொ |
| 9 | றோ | றோ |
| 10 | னா | னா |
| 11 | னை | னை |
| 12 | னொ | னொ |
| 13 | னோ | னோ |



9th_Tamil_Pages 122-264.indd 212 23-01-2020 20:21:18

எனக் கருதினார். இச்சீரமைப்புக்கான மாற்று எழுத்துருக்களையும் (வரி வடிவம்) உருவாக்கினார். கால வளர்ச்சிக்கு இத்தகு மொழிச் சீரமைப்புகள் தேவை என்று கருதினார். பெரியாரின் இக்கருத்தின் சில கூறுகளை 1978ஆம் ஆண்டு தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது.

### பெண்கள் நலம்

அக்காலத்தில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் ஒடுக்கப்பட்டிருந்தனர். எனவே, நாட்டு விடுதலையைவிட, பெண் விடுதலைதான் முதன்மையானது என்று கூறினார் பெரியார்.

'கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஆண்களுக்கு நிகரான உரிமை, பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்; வேலைவாய்ப்பில் ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு பெண்களுக்குத் தரப்பட வேண்டும்; பொருளாதாரத்தில் பெண்கள் பிறரைச் சார்ந்து வாழவேண்டிய நிலையில் இருக்கக்கூடாது; நன்கு கல்வி கற்று, சுய உழைப்பில் பொருளீட்ட வேண்டும். தெளிந்த அறிவுடனும் தன்னம்பிக்கையுடனும் திகழ வேண்டும்' என்றார் பெரியார்.

இளம்வயதில் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கக்கூடாது; கைம்பெண்களுக்கு மறுமணம் செய்ய வழிவகை காணவேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தினார். குடும்பத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் சம உரிமை அளிக்கப்படவேண்டும்; பெண்களின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும்; குடும்பச் சொத்தில் ஆண்களுக்குச் சமமான உரிமையைப் பெண்களுக்கும் வழங்க வேண்டும்; குடும்பப் பணிகளில் ஆண்களுக்கென்று தனிப்பணிகள் எதுவுமில்லை. ஆண்களும் குடும்பப் பணிகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பன போன்ற கருத்துகளை எடுத்துரைத்தார் பெரியார்.

**தெரியுமா?**

**பெரியார் விதைத்த விதைகள்:**

கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் இடஒதுக்கீடு

பெண்களுக்கான இடஒதுக்கீடு

பெண்களுக்கான சொத்துரிமை

குடும்ப நலத்திட்டம்

கலப்புத் திருமணம்,

சீர்திருத்தத் திருமணம் ஏற்பு

### சிக்கனம்

சிக்கனம் என்னும் அருங்குணத்தைப் பெரியார் பெரிதும் வலியுறுத்தினார். அதற்கேற்பத் தானும் வாழ்ந்து காட்டினார். பொருளாதாரத் தன்னிறைவு அடையாத நிலையில் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயம் என்றார் பெரியார். விழாக்களாலும் சடங்குகளாலும் மூடப்பழக்கம் வளர்வதோடு, வீண்செலவும் ஏற்படுவதால் தேவையற்ற சடங்குகளையும் விழாக்களையும்

**தெரியுமா?**

1938 நவம்பர் 13 இல் சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ரா.வுக்குப் 'பெரியார்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

27. 06. 1970 இல் யுனெஸ்கோ மன்றம் என்ற அமைப்பு தந்தை பெரியாரைத் 'தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' எனப் பாராட்டிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.



9th_Tamil_Pages 122-264.indd 213 23-01-2020 20:21:18

தவிர்க்கவேண்டும் என்றார் அவர்; திருமணம் போன்ற விழாக்களைப் பகட்டின்றி மிக எளிமையாகவும் சீர்திருத்த முறையிலும் நடத்த வேண்டும் என்றார்.

### சிந்தனைச் சிறப்புகள்

பெரியாரின் சிந்தனைகள் தொலைநோக்கு உடையவை; அறிவியல் அடிப்படையில் அமைந்தவை; மனிதநேயம் வளர்க்கப் பிறந்தவை. நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துகளை அவர் எப்பொழுதும் கூறியதில்லை. மேலும், தமது சீர்திருத்தக் கருத்துகளுக்கேற்ப வாழ்ந்து காட்டினார்; தம் வாழ்நாள் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புரை செய்தார்; சமுதாயம் மூடப்பழக்கங்களிலிருந்து மீண்டெழ அரும்பாடுபட்டார்; அதற்காகப் பலமுறை சிறை சென்றார்; பலரின் கடும் எதிர்ப்புகளைச் சந்தித்தார். இறுதி மூச்சுவரை சமூகச் சீர்திருத்தப் போராளியாகவே வாழ்ந்து மறைந்தார்.

'பெரியாரின் சிந்தனைகள் அறிவுலகின் திறவுகோல்; பகுத்தறிவுப் பாதைக்கு வழிகாட்டி; மனித நேயத்தின் அழைப்பு மணி; ஆதிக்கசக்திகளுக்கு எச்சரிக்கை ஒலி; சமூகச் சீர்கேடுகளைக் களைவதற்கு மாமருந்து' என்று அறிஞர்கள் மதிப்பிடுவர்.

**தெரிந்து தெளிவோம்**

**பெரியார் இயக்கமும் இதழ்களும்**

தோற்றுவித்த இயக்கம் – சுயமரியாதை இயக்கம்

தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு –1925

நடத்திய இதழ்கள் – குடியரசு, விடுதலை, உண்மை, ரிவோல்ட் (ஆங்கில இதழ்)

## கற்பவை கற்றபின்...

1. 'இன்று பெரியார் இருந்திருந்தால்" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சுக்கான உரை ஒன்றை எழுதுக.
2. பெரியாரை நேர்காணல் செய்வதாகக் கருதி வினாப்பட்டியலை உருவாக்குக.
3. 'இன்றைய சமூகம் பெரியாரின் பாதையில் நடக்கிறதா? நடக்கவில்லையா?' எனும் தலைப்பில் கலந்துரையாடல் நடத்துக.

LLKB3E

தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்
அவர்தாம் பெரியார் – பார்
அவர்தாம் பெரியார்

– புரட்சிக்கவி பாரதிதாசன்





9th_Tamil_Pages 122-264.indd 214 23-01-2020 20:21:19

கவிதைப் பேழை

அறம்

அ

# ஒளியின் அழைப்பு

– ந. பிச்சமூர்த்தி


LLU752

**நுழையும்முன்**

புவிஈர்ப்பு விசையை எதிர்த்து விண்ணோக்கி விரைவது தாவரத்தின் தனித்துவம். வேர் வளர்க்கும் கதிரவன் ஒளியும் காற்றும் நீரும் பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும் பாறையும் என எல்லாம் இணைந்தே இயற்கையைப் போற்றி வளர்க்கின்றன. போட்டியின்றி வாழ்க்கையில்லை; வலிகளின்றி வெற்றியில்லை. ஒன்றையொன்று அடுத்தும் படுத்தும் மென்மேலும் முன்னேறுவது இயற்கைக்கு மட்டுமன்று, வாழ்க்கைக்கும்தான்!

*பிறவி இருளைத் துளைத்து*
*சூழலின் நிழலை வெறுத்து முகமுயர்த்தி*
*எப்படி விண்ணின்று வழியும் ஒளியமுதைத் தேடிப் போகிறது*
*ரவியின் கோடானுகோடி விரல்களின் அழைப்பிற்கு இணங்கி*
*எப்படி உடலை நெளித்து நீட்டி, வளைத்து வளருகிறது*
*எப்படி அமிருதத்தை நம்பி, ஒளியை வேண்டி*
*பெருமரத்துடன் சிறு கமுகு போட்டியிடுகிறது*
*அதுவே வாழ்க்கைப் போர்*
*முண்டி மோதும் துணிவே இன்பம்*
*உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி.*

*– ந. பிச்சமூர்த்தி*



## சொல்லும் பொருளும்

விண் – வானம்; ரவி – கதிரவன்; கமுகு –பாக்கு

## பாடலின் பொருள்

கமுகு மரம், தான் தோன்றிய இடத்தில் இருந்த பெருமரத்தின் நிழல் என்னும் இருளைத் துளைத்து நின்றது. பெருமரத்தின் நிழலை வெறுத்தது. உச்சிக்கிளையை மேலே உயர்த்தியது. விண்ணிலிருந்து வரும் கதிரவன் ஒளியாகிய உயிர்ப்பைத் (அமுதை) தேடியது. மீண்டும் மீண்டும் உயர்ந்து உயரே கதிரவன் ஒளிக்கதிர்களாகிய விரல்களின் அழைப்பைக் கண்டதும், பெருமரத்தின் இருட்டில் இருந்துகொண்டே தன் கிளைகளை வளைத்து, நீட்டியது.

அமுதத்தை நம்பி, ஒளியை வேண்டிக் கமுகு அப்பெருமரத்துடன் போட்டி போடுகிறது. இதுதான் வாழ்க்கைப்போர். வாழ்க்கை உறுதிபெற வேண்டுமென்றால் போட்டியிட்டு, போரிட்டே ஆக வேண்டும். பெருமரத்துடன் முட்டி மோதி மேலே செல்லும் துணிச்சலே இன்பம். முயற்சி உள்ளனவே வாழ்வில் மலர்ச்சி பெறும். கமுகுமரம் கடுமையாகப் பெருமரத்தோடு முட்டிமோதித் துணிச்சலான முயற்சிகளில் ஈடுபட்டது. நம்பிக்கை, தன்முனைப்போடு கூடிய போட்டியில் கமுகு வென்றது. பெருமரத்தை விஞ்சி வளர்ச்சி நடை போடுகிறது.



9th_Tamil_Pages 122-264.indd 215 23-01-2020 20:21:19

## இலக்கணக் குறிப்பு

பிறவிஇருள், ஒளியமுது, வாழ்க்கைப்போர்– உருவகங்கள்.

## பகுபத உறுப்பிலக்கணம்

வேண்டி = வேண்டு+இ

வேண்டு – பகுதி

இ – வினையெச்சவிகுதி

போகிறது = போ+கிறு+அ+து

போ–பகுதி; கிறு–நிகழ்கால இடைநிலை;

அ–சாரியை

து–ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

மலர்ச்சி = மலர்+ ச்+ சி

மலர் –பகுதி; ச் – பெயர் இடைநிலை;

சி – தொழிற்பெயர் விகுதி

*இயற்கையையும் வாழ்க்கை அனுபவங்களையும் இணைத்து, அறிவுத் தெளிவுடன் நல்வாழ்க்கைக்கான மெய்யியல் உண்மைகளைக் காணும் முயற்சிகளே பிச்சமூர்த்தியின் கவிதைகள்* –'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் நூலில் வல்லிக்கண்ணன்.



### நூல் வெளி

புதிய படைப்புச் சூழலில் மரபுக்கவிதையின் யாப்புப் பிடியிலிருந்து விடுபட்ட கவிதைகள் புதுக்கவிதைகள் எனப்பட்டன. பாரதியாரின் வசன கவிதையைத் தொடர்ந்து புதுக்கவிதை படைக்கும் முயற்சியில் ந. பிச்சமூர்த்தி ஈடுபட்டார். எனவே, அவர் "புதுக்கவிதையின் தந்தை" என்று போற்றப்படுகிறார். புதுக்கவிதையை "இலகு கவிதை, கட்டற்ற கவிதை, விலங்குகள் இலாக் கவிதை, கட்டுக்குள் அடங்காக் கவிதை என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடுகின்றனர்.

ந. பிச்சமூர்த்தி தொடக்க காலத்தில் வழக்குரைஞராகவும் பின்னர் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத் துறை அலுவலராகவும் பணியாற்றினார். ஹனுமான், நவஇந்தியா ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகவும் இருந்தார். இவர் புதுக்கவிதை, சிறுகதை, ஓரங்க நாடகங்கள், கட்டுரைகள் ஆகிய இலக்கிய வகைமைகளைப் படைத்தவர். இவரின் முதல் சிறுகதை – "ஸயன்ஸுக்கு பலி" என்பதாகும். 1932 இல் கலைமகள் இதழ் வழங்கிய பரிசைப் பெற்றார். பிக்ஷு, ரேவதி ஆகிய புனைபெயர்களில் படைப்புகளை எழுதினார்.

LM436P

## கற்பவை கற்றபின்...

1. *முயற்சி, நம்பிக்கை, வெற்றி ஆகியவற்றை உணர்த்தும் அறிஞர் மொழிகளைத் தேடித் தொகுக்க.* (எ.கா.)

| | | |
|---|---|---|
| உங்கள் பாதையை<br>நீங்களே தேர்ந்தெடுங்கள்<br>ஏனெனில்<br>வேறு எவராலும் உங்கள் கால்களைக் கொண்டு<br>நடக்க முடியாது....! | எட்டி விடும் தூரத்தில்<br>வெற்றியும் இல்லை!<br>அதை விட்டுவிடும்<br>எண்ணத்தில்<br>நானும் இல்லை! | வாழ நினைப்பவனுக்கு<br>வானம் கூட<br>வாயிற் படிதான்! |

2. *'தன்னம்பிக்கையின் மறுபெயர் நான்' என்னும் தலைப்பில் ஒரு கவிதை படைத்து வகுப்பறையில் படித்துக்காட்டுக.*



9th_Tamil_Pages 122-264.indd 216 23-01-2020 20:21:19

கவிதைப் பேழை

# அறம்

அ

# தாவோ தே ஜிங்

– லா வோட்சு


LMCY8C




இருப்பதும் இல்லாதிருப்பதும் ஆகிய இரண்டு நிலைகளுக்குள் உள்ளடங்கியது வாழ்க்கை. ஒன்றைப் பிடித்த பிடியை விட்டுப் பிறிதொன்றை எட்டிப் பிடிக்கும் முன்னே ஏற்படும் வெற்றிட அனுபவங்களே வாழ்க்கையின் உருவத்தை வரைந்து வைத்து விடுகின்றன. உண்டு, இல்லை என்ற சிந்தனைகளுக்கிடையே உண்டு என்பதையே பயனுள்ளதாகக் கருதுவதைச் சீனக்கவிஞர் லாவோட்சு மறுக்கிறார். எந்த ஒன்றும் உருவாக வேண்டுமென்றால் உண்டும் வேண்டும்; இல்லையும் வேண்டும் என்ற கருத்தைக் கூறுவது இவர் படைத்த இக்கவிதை.

*ஆரக்கால் முப்பதும்*
*சக்கரத்தின் மையத்தில் இணைகின்றன;*
*ஆனால், சக்கரத்தின் பயன்*
*அதன் காலிப் பகுதியால் கிடைக்கிறது.*
*பாண்டம் பாண்டமாகக்*
*களிமண் வனையப்படுகிறது;*
*ஆனால், பாண்டத்தின் பயன்*
*அதன் காலிப் பகுதியால் கிடைக்கிறது.*
*வீட்டுச் சுவர்களில்*
*வாயிலுக்காகவும் சன்னலுக்காவும்*
*வெற்றுவெளியை விடுகிறோம்;*
*ஆனால், வாயிலும் சன்னலும்*
*வெற்றுவெளி என்பதால் பயன்படுகின்றன.*
*எனவே, ஒரு பக்கம்*
*இருத்தலின் பலன் கிடைக்கிறது;*
*இன்னொரு பக்கம்*
*இருத்தலின்மையைப் பயன்படுத்திக்கொள்கிறோம்.*





## பாடலின் பொருள்

சக்கரம் பல ஆரங்களைக் கொண்டதாயினும் அவற்றிடையே உள்ள வெற்றிடத்தை மையமாக வைத்தே சுழல்கிறது; அழகிய வேலைப்பாடுகள் கொண்ட பானையாயினும் அதன் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது; வீட்டிலுள்ள சாளரமும் கதவும்கூடச் சுவரின் வெற்றிடமே; அதுவே நமக்குப் பயன்பாடு. சுவர்களுக்கிடையே




9th_Tamil_Pages 122-264.indd 217 23-01-2020 20:21:20

உள்ள வெற்றிடமே அறையாக நமக்குப் பயன்படுகிறது.

நம் பார்வையில் படும் உருப்பொருள்கள் உண்மை எனினும், உருவம் இல்லாத வெற்றிடமே நமக்குப் பயன் உடையதாகிறது. வெற்றிடமே பயன் உடையதாகுமெனில் நாம் வெற்றி பெறத் தடை ஏதும் உண்டோ?

(வாழ்க்கை மிகவும் விரிவானது. அதன் சில பகுதிகளை மட்டுமே நாம் பயன்படுத்துகிறோம். உணர்கிறோம். நாம் பயன்படுத்தாத அந்தப் பகுதிகளும் சுவை மிகுந்தவை; பொருள் பொதிந்தவை. வாழ்க்கையின் அனைத்துப் பக்கங்களையும் சுவைத்து, நம் வாழ்க்கையைப் பொருளுடையதாக்குவோம்.)

### தத்துவ விளக்கம்

இல்லை என்பது வடிவத்தை வரையறை செய்கிறது. குடம் செய்ய மண் என்பது உண்டு. குடத்திற்குள்ளே வெற்றிடம் என்பது இல்லை. இந்த உண்டும் இல்லையும் சேர்வதால்தான் குடத்தில் நீரை நிரப்ப முடியும். வெற்றிடம் இல்லாத குடத்தில் நீரை நிரப்ப முடியாது. இவை முரண்களாகத் தெரிந்தாலும் இவை முரண்களல்ல. அதை வலியுறுத்தவே இன்மையால்தான் நாம் பயனடைகிறோம் என்கிறார் கவிஞர். ஆரங்களைவிட நடுவிலுள்ள வெற்றிடம் சக்கரம் சுழல உதவுகிறது. குடத்து ஒட்டினைவிட உள்ளே இருக்கும் வெற்றிடமே பயன்படுகிறது. சுவர்களைவிட வெற்றிடமாக இருக்கும் இடமே பயன்படுகிறது. ஆகவே, 'இன்மை' என்று எதையும் புறக்கணிக்க வேண்டாம் என்பது அவர் கருத்து.

### பகுபத உறுப்பிலக்கணம்

இணைகின்றன = இணை+கின்று+அன்+அ

- இணை – பகுதி
- கின்று – நிகழ்கால இடைநிலை
- அன் – சாரியை
- அ – பலவின்பால் வினைமுற்று விகுதி

### இலக்கணக் குறிப்பு

பாண்டம் பாண்டமாக – அடுக்குத்தொடர்

வாயிலும் சன்னலும் – எண்ணும்மை

### நூல் வெளி



லாவோட்சு, சீனாவில் பொ.ஆ.மு. 2ஆம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்தவர். சீன மெய்யியலாளர் கன்பூசியஸ் இவரது சமகாலத்தவர். அக்காலம், சீனச் சிந்தனையின் பொற்காலமாகத் திகழ்ந்தது. லாவோட்சு "தாவோவியம்" என்ற சிந்தனைப்பிரிவைச் சார்ந்தவர். ஒழுக்கத்தை மையமாக வைத்துக் கன்பூசியஸ் சிந்தித்தார். லாவோட்சுவோ இன்றைய வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்னும் சிந்தனையை முன்வைத்தார். தாவோவியம் அதையே வலியுறுத்துகிறது. பாடப்பகுதியிலுள்ள கவிதையை மொழிபெயர்த்தவர் சி.மணி.

## கற்பவை கற்றபின்...

1. நீங்கள் அறிந்த அயல்நாட்டுத் தத்துவ அறிஞர்களின் பெயர்களைத் தொகுக்க.
2. ஜென் தத்துவக்கதை ஒன்றைப் படித்து அதுகுறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.
3. மண்பாண்டங்கள் செய்வோரைச் சந்தித்து அதன் உருவாக்கம் குறித்துத் தெரிந்து கொள்க.

LMLU9Z



9th_Tamil_Pages 122-264.indd 218 23-01-2020 20:21:20


கவிதைப் பேழை

# அறம்

## அ

# யசோதர காவியம்

LP3HVY




படித்து இன்புற மட்டுமன்றி வாழ்க்கை நெறிகளை அறிவுறுத்த உதவுவனவும் இலக்கியங்களே! உலகப் பொதுமறையாம் திருக்குறள் தொடங்கி அறம் சார்ந்த தனித்துவ இலக்கியங்கள் தமிழில் உள்ளன. அவ்விலக்கியங்கள் காட்டும் வாழ்க்கைப்பாதை உயர்வானது; அப்பாதையில் பயணித்தால் வாழ்க்கையை வளமாக்கலாம். வாருங்கள் அறத்தேரின் வடம் பிடிப்போம்!

*ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக*
*போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக*
*நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக*
*காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.* * 1405

### சொல்லும் பொருளும்

அறம் – நற்செயல்; வெகுளி– சினம்; ஞானம்– அறிவு; விரதம் – மேற்கொண்ட நன்னெறி.

### பாடலின்பொருள்

நாம் ஒரு செயலைச் செய்வதென்றால் அச்செயல் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும்; நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்கிட வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்கவேண்டும்; ஆராய வேண்டுமானால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்; இடைவிடாது போற்றிக் காக்க வேண்டுமானால் தாம் கொண்ட நன்னெறியினைக் காக்க வேண்டும்.

### இலக்கணக் குறிப்பு

ஆக்குக, போக்குக, நோக்குக, – வியங்கோள் வினைமுற்றுகள்

### பகுபத உறுப்பிலக்கணம்

போக்குக = போக்கு+க


போக்கு – பகுதி

க – வியங்கோள் வினைமுற்று விகுதி



### நூல் வெளி

ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று யசோதர காவியம். இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் தழுவி எழுதப் பெற்றதாகும். இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை. இது சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பர். யசோதர காவியம், 'யசோதரன்' என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது. இந்நூல் ஐந்து சருக்கங்களைக் கொண்டது; பாடல்கள் எண்ணிக்கை 320 எனவும் 330 எனவும் கருதுவர்.



## கற்பவை கற்றபின்...

LPCDXL

தொடர்களை ஒப்பிட்டுக் கருத்துகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.

| | |
|---|---|
| அறம் செய விரும்பு<br>ஆறுவது சினம் | ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக<br>போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக |



9th_Tamil_Pages 122-264.indd 219 23-01-2020 20:21:20

விரிவானம்

# அறம்

அ

# மகனுக்கு எழுதிய கடிதம்

## – நா. முத்துக்குமார்

LPL9Z9

நுழையும்முன்

தொலைவில் உள்ளோருக்குக் கருத்தைத் தெரிவிக்கப் புகையில் தொடங்கி ஒலியில் வளர்ந்து விலங்குகள், பறவைகள், மனிதர்கள் எனப் பலராலும் தொடர்ந்து அஞ்சலில் நிலைபெற்றுள்ளோம் நாம். அதுவே இன்று மின்னஞ்சல் உள்ளிட்ட புதுப்புதுப் படிமலர்ச்சிகளில் வளர்ந்து கொண்டே இருக்கிறது. பரிமாற்றங்கள் எவ்வாறாக இருப்பினும் உயர்வான கருத்தும் உயிர்ப்புள்ள மொழியுமே செய்தி அளிப்பவருக்கும் பெறுபவருக்குமான உறவுப்பாலத்தை உறுதியாக்குகிறது! கவிஞர் நா. முத்துக்குமார், தம் மகனுக்கு எழுதுவதாக அமைந்த இக்கடிதம், பிள்ளை வளர்ப்பில் தாயுமானவராகத் திகழ்ந்த ஒருவரை நமக்குக் காட்டிச் செல்கிறது.

அன்புள்ள மகனுக்கு, அப்பா எழுதுவது. இது நான் உனக்கு எழுதும் முதல் கடிதம். இதைப் படித்துப் புரிந்துகொள்ளும் வயதில் நீ இல்லை. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டு இருக்கிறாய். உன் மொழியில் உனக்கு எழுத, நான் கடவுளின் மொழியை அல்லவா கற்க வேண்டும்.

என் பிரியத்துக்குரிய பூங்குட்டியே! உன் மெத்தென்ற பூம்பாதம் என் மார்பில் உதைக்க... மருத்துவமனையில் நீ பிறந்ததும் உனை அள்ளி என் கையில் கொடுத்தார்கள். என் உதிரம் உருவமானதை, அந்த உருவம் என் உள்ளங்கையில் கிடப்பதை, குறுகுறு கை நீட்டி என் சட்டையைப் பிடித்து இழுப்பதை, கண்ணீர் மல்கப் பார்த்துக்கொண்டு இருந்தேன்.

உலகிலேயே மிகப்பெரிய இன்பம் எது?.... "தம் மக்கள் மெய் தீண்டல் உயிர்க்கு இன்பம்" என்கிறார் வள்ளுவர். நீ எம் மெய் தீண்டினாய், மெய்யாகவே மெய்யாகவே நான் தூள் தூளாக உடைந்து போனேன். உன் பொக்கை வாய்ப் புன்னகையில் நீ என்னை அள்ளி அள்ளி எடுத்து மீண்டும் மீண்டும் ஒட்டவைத்துக்கொண்டு இருந்தாய்.

நீ அழுதாய்; சிரித்தாய்; சிணுங்கினாய்; குப்புறக் கவிழ்ந்து, தலை நிமிர்ந்து, அந்தச் சாகசத்தைக் கொண்டாடினாய். தரை எல்லாம் உனதாக்கித் தவழ்ந்தாய். தகப்பன் விரல் பிடித்து எழுந்தாய். நீயாகவே விழுந்தாய். தத்தித் தத்தி நடந்தாய். தாழ்வாரம் எங்கும் ஓடினாய். மழலை பேசி, மொழியை ஆசீர்வதித்தாய்.



என் பொம்முக்குட்டியே! இந்த எல்லாத் தருணங்களிலும் நீ நம் வீட்டுக்கு இறைவனை அழைத்து வந்தாய்.

என் செல்லமே! இந்த உலகமும் இப்படித்தான். அழ வேண்டும். சிரிக்க வேண்டும். சிணுங்க வேண்டும். குப்புறக் கவிழ்ந்து, பின் தலை நிமிர்ந்து, அந்தச்



9th_Tamil_Pages 122-264.indd 220 23-01-2020 20:21:20

சாகசத்தைக் கொண்டாட வேண்டும். தரை எல்லாம் தனதாக்கித் தவழ வேண்டும். எழ வேண்டும். விழ வேண்டும். தத்தித் தத்தி நடக்க வேண்டும். வாழ்க்கை முழுக்க இந்த நாடகத்தைத்தான் நீ வெவ்வேறு வடிவங்களில் நடிக்க வேண்டும்.

என் சின்னஞ்சிறு தளிரே! கல்வியில் தேர்ச்சிகொள். அதே நேரம், அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக்கொள். தீயைப் படித்துத் தெரிந்து கொள்வதைவிட, தீண்டிக் காயம் பெறு. அந்த அனுபவம் எப்போதும் சுட்டுக்கொண்டே இருக்கும். இறக்கும்வரை இங்கு வாழ, சூத்திரம் இதுதான், கற்றுப்பார். உடலைவிட்டு வெளியேறி, உன்னை நீயே உற்றுப்பார்.

எங்கும் எதிலும், எப்போதும் அன்பாய் இரு. அன்பைவிட உயர்ந்தது இந்த உலகத்தில் வேறு எதுவுமே இல்லை. உன் பேரன்பால் இந்தப் பிரபஞ்சத்தை நனைத்துக்கொண்டே இரு.

உன் தாத்தா, ஆகாய விமானத்தை அண்ணாந்து பார்த்தார். அவரது 57ஆவது வயதில்தான் அதில் அமர்ந்து பார்த்தார். உன் தகப்பனுக்கு 27ஆவது வயதில் விமானத்தின் கதவுகள் திறந்தன. ஆறு மாதக் குழந்தைப் பருவத்திலேயே நீ ஆகாயத்தில் மிதந்தாய். நாளை உன் மகன் ராக்கெட்டில் பறக்கலாம்.

இந்த மாற்றம் ஒரு தலைமுறையில் வந்தது அல்ல. இதற்குப் பின்னால் நெடியதொரு உழைப்பு இருக்கிறது. என் முப்பாட்டன் காடு திருத்தினான். என் பாட்டன் கழனி அமைத்தான். என் தகப்பன் விதை விதைத்தான். உன் தகப்பன் நீர் ஊற்றினான். நீ அறுவடை செய்துகொண்டு இருக்கிறாய். என் தங்கமே! உன் பிள்ளைக்கான விதையையும் உன் உள்ளங்கையில் வைத்திரு. உழைக்கத் தயங்காதே. உழைக்கும்வரை உயர்ந்து கொண்டு இருப்பாய்.

இதை எழுதிக்கொண்டு இருக்கையில் என் பால்ய காலம் நினைவுக்கு வருகிறது. கிராமத்தில் கூரை வீட்டிலும், பின்பு ஓட்டு வீட்டிலும் வளர்ந்தவன் நான். கோடைக் காலங்களில் வெப்பம் தாங்காமல் ஓட்டுக்கூரையில் இருந்து கொடிய தேள்கள் கீழே விழுந்துகொண்டே இருக்கும். அதற்குப் பயந்து என் தகப்பன் என் அருகே அமர்ந்து இரவு முழுவதும் பனை ஓலை விசிறியால் விசிறிக்கொண்டே இருப்பார். இன்று அந்த விசிறியும் இல்லை. கைகளும் இல்லை. மாநகரத்தில் வாழும் நீ, வாழ்க்கை முழுக்கக் கோடைக்காலங்களையும் வெவ்வேறு வடிவங்களில் கொடிய தேள்களையும் சந்திக்க வேண்டி இருக்கும். எத்தனை காலம்தான் உன் தகப்பன் உன் அருகில் அமர்ந்து விசிறிக்கொண்டு இருப்பான்? உனக்கான காற்றை நீயே உருவாக்கப் பழகு.

வயதின் பேராற்றங்கரை உன்னையும் வாலிபத்தில் நிறுத்தும். சிறகு முளைத்த தேவதைகள் உன் கனவுகளை ஆசீர்வதிப்பார்கள். பெண் உடல் புதிராகும். உன் உடல் உனக்கே எதிராகும். என் தகப்பன் என்னிடம் ஒளித்துவைத்த ரகசியங்கள் அடங்கிய பெட்டியின் சாவியை நான் தேட முற்பட்டதைப்போல், நீயும் தேடத் தொடங்குவாய். பத்திரமாகவும் பக்குவமாகவும் இருக்க வேண்டிய தருணம் அது. உனக்குத் தெரியாதது இல்லை. பார்த்து நடந்துகொள்.

நிறையப் பயணப்படு. பயணங்களின் ஜன்னல்களே முதுகுக்குப் பின்னாலும் இரண்டு கண்களைத் திறந்து வைக்கின்றன. புத்தகங்களை நேசி. ஒரு புத்தகத்தைத் தொடுகிறபோது

### தெரிந்து தெளிவோம்

கைபேசியின் வரவால் இன்று கடிதம் எழுதும் பழக்கம் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். கடிதங்களைக் கொண்டு பல வரலாறுகளையும் இலக்கியங்களையும் பரிமாறியிருக்கிறார்கள். கடித வடிவில் புதினங்களும் எழுதப்பட்டுள்ளன. தாகூர், நேரு, டி.கே.சி., வல்லிக்கண்ணன், பேரறிஞர் அண்ணா, மு. வரதராசனார், கு. அழகிரிசாமி, கி. இராஜநாராயணன் முதலானோர் கடித வடிவில் இலக்கியங்கள் படைத்துள்ளனர்.



9th_Tamil_Pages 122-264.indd 221 23-01-2020 20:21:21

## தூர்

வேப்பம்பூ மிதக்கும்
எங்கள் வீட்டுக் கிணற்றில்
தூர் வாரும் உற்சவம்
வருடத்திற்கொரு முறை
விசேஷமாய் நடக்கும்.

ஆழ்நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்.

கொட்டாங்குச்சி, கோலி, கரண்டி,
கட்டையோடு உள்விழுந்த
துருப்பிடித்த ராட்டினம்,
வேலைக்காரி திருடியதாய்
சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்,
சேற்றிற்குள் கிளறி
எடுப்போம் நிறையவே.

சேறுடா... சேறுடாவென
அம்மா அதட்டுவாள்
என்றாலும்
சந்தோஷம் கலைக்க
யாருக்கு மனம் வரும்?

பகை வென்ற வீரனாய்
தலைநீர் சொட்டச் சொட்ட
அப்பா மேல் வருவார்.

இன்றுவரை அம்மா
கதவுகளின் பின்னிருந்துதான்
அப்பாவோடு பேசுகிறாள்.
கடைசிவரை அப்பாவும்
மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க.

– நா. முத்துக்குமார்

நீ ஓர் அனுபவத்தைத் தொடுவாய். உன் பாட்டனும் தகப்பனும் புத்தகங்களின் காட்டில் தொலைந்தவர்கள். உன் உதிரத்திலும் அந்தக் காகித நதி ஓடிக்கொண்டே இருக்கட்டும்.

கிடைத்த வேலையைவிட, பிடித்த வேலையைச் செய். இனிய இல்லறம் தொடங்கு. யாராவது கேட்டால், இல்லை எனினும் கடன் வாங்கியாவது உதவி செய். அதில் கிடைக்கும் ஆனந்தம் அலாதியானது.

உறவுகளிடம் நெருங்கியும் இரு, விலகியும் இரு. இந்த மண்ணில் எல்லா உறவுகளையும்விட மேன்மையானது நட்பு மட்டுமே. நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள். உன் வாழ்க்கை நேராகும்.

இவை எல்லாம் என் தகப்பன் எனக்குச் சொல்லாமல் சொன்னவை. நான் உனக்குச் சொல்ல நினைத்துச் சொல்பவை.

என் சந்தோஷமே! நீ பிறந்த பிறகுதான் என் தகப்பனின் அன்பையும் அருமையையும் நான் அடிக்கடி உணர்கிறேன். நாளை உனக்கொரு மகன் பிறக்கையில், என் அன்பையும் அருமையையும் நீ உணர்வாய்.

நாளைக்கும் நாளை நீ உன் பேரன், பேத்திகளுடன் ஏதோ ஒரு ஊரில் கொஞ்சிப் பேசி விளையாடிக்கொண்டு இருக்கையில் என் ஞாபகம் வந்தால், இந்தக் கடிதத்தை மீண்டும் எடுத்துப் படித்துப்பார். உன் கண்களில் இருந்து உதிரும் கண்ணீர்த் துளியில் வாழ்ந்து கொண்டு இருப்பேன் நான்.

இப்படிக்கு,
உன் அன்பு அப்பா.

## கற்பவை கற்றபின்...

1. முத்துக்குமார் தம் மகனுக்கு எழுதிய கடிதத்தைப் போல நீங்கள் யாருக்குக் கடிதம் எழுத விரும்புகிறீர்கள்? அப்படியொரு கடிதம் எழுதுக.
2. வகுப்பில் நீங்கள் தேர்ந்தெடுத்த நண்பரின் சிறந்த பண்பைப் பாராட்டியும் அவர் மாற்றிக்கொள்ள வேண்டிய பண்பைப் பற்றியும் பெயரைக் குறிப்பிடாமல் கடிதமாக எழுதிப் படித்துக்காட்டுக.

LPV61H



9th_Tamil_Pages 122-264.indd 222 23-01-2020 20:21:21

கற்கண்டு

# அறம் அ

# யாப்பிலக்கணம்

LQ523J

## யாப்பின் உறுப்புகள்

கவிதை இயற்றும் முறைகளைக் கூறும் இலக்கணமே யாப்பிலக்கணம். இது பாக்கள் பற்றியும் அவற்றின் உறுப்புகள் பற்றியும் விரிவாகப் பேசுகிறது.

உறுப்பியலில் யாப்பின் ஆறு உறுப்புகளான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை விளக்கப்படுகின்றன.

### எழுத்து

யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்துகள் குறில், நெடில், ஒற்று என மூவகைப்படும்.

### அசை

எழுத்துகளால் ஆனது 'அசை' எனப்படும். ஓரெழுத்தோ, இரண்டெழுத்தோ நிற்பது அசை ஆகும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும். அசைப் பிரிப்பில் ஒற்றெழுத்தைக் கணக்கிடுவதில்லை.

| நேரசை | |
|---|---|
| தனிக்குறில் | ப |
| தனிக்குறில், ஒற்று | பல் |
| தனிநெடில் | பா |
| தனிநெடில், ஒற்று | பால் |

| நிரையசை | |
|---|---|
| இருகுறில் | அணி |
| இருகுறில், ஒற்று | அணில் |
| குறில், நெடில் | விழா |
| குறில், நெடில், ஒற்று | விழார் |

### சீர்

ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட அசைகளின் சேர்க்கை சீர் ஆகும். இதுவே பாடலில் ஓசைக்கு அடிப்படையாய் அமையும். ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் எனச் சீர்கள் நான்கு வகைப்படும். அவை:

நேர் என்பதோடு உகரம் சேர்ந்து முடிவது உண்டு. அதனை நேர்பு என்னும் அசையாகக் கொள்வர். நிரை என்னும் அசையோடு உகரம் சேர்ந்து முடியும் அசைகள் நிரைபு என்று கூறப்படும். இவை வெண்பாவின் இறுதியாய் மட்டுமே அசையாகக் கொள்ளப்படும்.

ஈரசைச் சீர்களுக்கு, 'இயற்சீர்', 'ஆசிரிய உரிச்சீர்' என்னும் வேறு பெயர்களும் உண்டு.

### ஓரசைச் சீர்

| அசை | வாய்பாடு |
|---|---|
| நேர் | நாள் |
| நிரை | மலர் |
| நேர்பு | காசு |
| நிரைபு | பிறப்பு |

### ஈரசைச் சீர்

| அசை | வாய்பாடு | |
|---|---|---|
| நேர் நேர் | தேமா | மாச்சீர் |
| நிரை நேர் | புளிமா | |
| நிரை நிரை | கருவிளம் | விளச்சீர் |
| நேர் நிரை | கூவிளம் | |

### மூவசைச் சீர்

| காய்ச்சீர் | | கனிச்சீர் | |
|---|---|---|---|
| அசை | வாய்பாடு | அசை | வாய்பாடு |
| நேர் நேர் நேர் | தேமாங்காய் | நேர் நேர் நிரை | தேமாங்கனி |
| நிரை நேர் நேர் | புளிமாங்காய் | நிரைநேர்நிரை | புளிமாங்கனி |
| நிரை நிரை நேர் | கருவிளங்காய் | நிரை நிரை நிரை | கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் | கூவிளங்காய் | நேர் நிரை நிரை | கூவிளங்கனி |

காய்ச்சீர்களை "வெண்சீர்கள்" என்று அழைக்கிறோம்.

மூவசைச் சீர்களை அடுத்து நேரசையோ அல்லது நிரையசையோ சேர்கின்ற பொழுது நாலசைச்சீர் தோன்றும்.

## அலகிட்டு வாய்பாடு கூறுதல்

நாம் எளிய முறையில் திருக்குறளை இங்கு அலகிடலாம்.

வெண்பாவில் இயற்சீரும், வெண்சீரும் மட்டுமே வரும்; பிற சீர்கள் வாரா. தளைகளில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் மட்டுமே வரும்; பிற தளைகள் வாரா.

ஈற்றடியின் ஈற்றுச் சீர் ஓரசைச் சீர்களில் முடியும்.

இப்போது அலகிடலாம்.

***பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்***
***அறம்நாணத் தக்க துடைத்து.***

| வரிசை | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | பிறர்/நா/ணத்/ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2 | தக்/கது/ | நேர் நிரை | கூவிளம் |
| 3 | தான்/நா/ணா/ | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 4 | னா/யின்/ | நேர் நேர் | தேமா |
| 5 | அறம்/நா/ணத்/ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 6 | தக்/க/ | நேர் நேர் | தேமா |
| 7 | துடைத்/து | நிரைபு | பிறப்பு |

பாட நூலில் வந்துள்ள பிற குறட்பாக்களுக்கும் அலகிடும் பயிற்சி மேற்கொள்க.

### தளை

பாடலில், நின்ற சீரின் ஈற்றசையும், அதனையடுத்து வரும் சீரின் முதல் அசையும் பொருந்துதல் 'தளை 'எனப்படும். இது ஒன்றியும் ஒன்றாமலும் வரும். அது ஏழு வகைப்படும்.

1. நேரொன்றாசிரியத்தளை – மா முன் நேர்
2. நிரையொன்றாசிரியத்தளை – விளம் முன் நிரை
3. இயற்சீர் வெண்டளை – மா முன் நிரை, விளம் முன் நேர்
4. வெண்சீர் வெண்டளை – காய் முன் நேர்
5. கலித்தளை – காய் முன் நிரை
6. ஒன்றிய வஞ்சித்தளை – கனி முன் நிரை
7. ஒன்றா வஞ்சித்தளை – கனி முன் நேர்

### அடி

இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட சீர்களும் தொடர்ந்து வருவது 'அடி' எனப்படும். அவை ஐந்து வகைப்படும்.

இரண்டு சீர்களைக் கொண்டது குறளடி; மூன்று சீர்களைக் கொண்டது சிந்தடி; நான்கு சீர்களைக் கொண்டது அளவடி; ஐந்து சீர்களைக் கொண்டது நெடிலடி; ஆறு சீர் அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டது கழிநெடிலடி.

### தொடை

தொடை - தொடுத்தல். பாடலின் அடிகளிலோ, சீர்களிலோ எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது 'தொடை' ஆகும். தொடை என்னும் செய்யுள் உறுப்பு, பாடலில் உள்ள அடிகள்தோறும் அல்லது சீர்கள்தோறும் ஒரு குறிப்பிட்ட வகையிலான ஓசை பொருந்தி வருமாறு பாடலை இயற்றுதல் பற்றி அமைகிறது.

மோனை, எதுகை, இயைபு, அளபெடை, முரண், இரட்டை, அந்தாதி, செந்தொடை என்று எட்டு வகைகளாகத் தொடை அமைகிறது.

**மோனைத் தொடை:** ஒரு பாடலில் அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி அமைவது. (எ.கா.)

*ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்*
*ஒற்றினால் ஒற்றிக் கொளல்.*

**எதுகைத் தொடை:** அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றியமைவது. (எ.கா.)

*திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து*
*அறனல்ல செய்யாமை நன்று.*

**இயைபுத் தொடை:** அடிகள்தோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ ஒன்றியமைவது. (எ.கா.)

*வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்*
*மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்*

## கற்பவை கற்றபின்...

1. உமக்குப் பிடித்த திருக்குறளை அலகிட்டு அதன் வாய்பாடு காண்க.
2. பாடல்களில் பயின்றுவரும் தொடைநயங்களை எடுத்து எழுதுக.

*கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்*
*கொடிகள் வானம் படிதர மூடும்*
*கண்ட பேரண்டம் தண்டலை நாடும்*
*கனக முன்றில் அனம் விளையாடும்*

*விண்ட பூமது வண்டலிட்டு ஓடும்*
*வெயில் வெய்யோன் பொன்னெயில் வழி தேடும்*
*அண்டர் நாயகர் செண்டலங் காரர்*
*அழகர் முக்கூடல் ஊர் எங்கள் ஊரே*

### வினாக்கள்

1. உங்கள் வீட்டில் உள்ளவர்களின் பெயர்களை நேர் – நிரை அசைகளாகப் பிரித்துப் பார்க்க.
2. மூவசைச் சீரில் அமைந்த பெயர்கள் நான்கைக் குறிப்பிடுக.
3. *தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்*
   *தம்தம் வினையான் வரும்.*
   இக்குறட்பாவில் பயின்றுவரும் மோனை, எதுகை ஆகியவற்றை கண்டறிக.
4. தளையின் வகைகளை எழுதுக.

LQDX57



9th_Tamil_Pages 122-264.indd 225 23-01-2020 20:21:21

## மதிப்பீடு

### பலவுள் தெரிக.

1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று – பெரியார் உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.

   காரணம் – சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.

   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

   இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

2. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்

   ஞாலத்தின் மாணப் பெரிது – இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது?

   அ) நாள் ஆ) மலர் இ)காசு ஈ)பிறப்பு

3. முண்டி மோதும் துணிவே இன்பம் – இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது

   அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

4. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.

   விடை – பானையின் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.

   அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?

   ஆ) பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?

   இ) பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது?

   ஈ) பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது?

5. 'ஞானம்' என்பதன் பொருள் யாது?

   அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

### குறுவினா

1. 'பகுத்தறிவு' என்றால் என்ன?
2. தாவோ தே ஜிங் 'இன்னொரு பக்கம்' என்று எதைக் குறிப்பிடுகின்றது?
3. கமுகுமரம் எதைத் தேடியது?
4. யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
5. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?



9th_Tamil_Pages 122-264.indd 226 23-01-2020 20:21:21

### சிறுவினா

1. சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.
2. நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?
3. பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களைக் குறிப்பிடுக.
4. யசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறிகளைத் திருக்குறளுடன் ஒப்பிட்டு எழுதுக.

### நெடுவினா

1. மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.
2. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டிருக்கும் தன்மகனுக்கு நா.முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
3. வாழ்க்கைப் போரில் வெற்றிபெறுவதற்கான வழிகளைக் கமுகுமரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

## மொழியை ஆள்வோம்

### படித்துச் சுவைக்க.

1) *இருத்தலெனும் சமுத்திரம், அந்தப் பேரிருளிலிருந்து வந்தது,*
*மெய்ம்மையெனும் இந்த ரத்தினம், ஊடுருவிப் பார்த்ததில்லை எவரும்;*
*அவரவர் இயல்பின்படி சொல்லிச் சென்றார்கள் ஒவ்வொருவரும்,*
*எதனுடைய குணத்தையும் விளக்க முடியாது எவராலும்.*

2) *நமது மகிழ்ச்சியின் தோற்றுவாயும் துயரத்தின் சுரங்கமும் நாமே,*
*நீதியின் இருப்பிடமும் அநீதியின் அஸ்திவாரமும் நாமே;*
*தாழ்ச்சியும் உயர்ச்சியும் நாமே, நிறைவும் குறைவும் நாமே,*
*ரசம் போன கண்ணாடி, சகலமும் தெரியும் ஜாம்ஷீத்தின் மாயக்கிண்ணம்,*
*இரண்டும் நாமே.*

– உமர் கய்யாம்

ஜாம்ஷீத் மாயக்கிண்ணம் – ஜாம்ஷீத் பாரசீகப் புராணங்களில் வரும் புகழ்பெற்ற அரசர். இவர் பல்வேறு கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியதாகப் புராணங்கள் கூறுகின்றன. ஜாம்ஷீத் மாயக்கிண்ணம் முக்காலத்தையும் காட்டக்கூடியதாக நம்பப்பட்டது.

### மொழிபெயர்க்க.

*Once Buddha and his disciples were thirsty. They reached a lake. But it was muddy because somebody just finished washing their clothes. Buddha asked his disciples to take a little rest there by the tree. After half an hour the disciples noticed that the water was very clear. Buddha said to them," You let the water and the mud be settled down on its own. Your mind is also like that. When it is disturbed, just let it be. Give a little time. It will settle down on its own. We can judge and take best decisions of our life when we stay calm."*



9th_Tamil_Pages 122-264.indd 227 23-01-2020 20:21:21

**சொற்றொடர்களை அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**

1) மறுநாள் வீட்டுக்கு வருவதாக முரளி கூறினார். (நேர்க்கூற்றாக மாற்றுக)

2) "தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்று அறிஞர் அண்ணாவைப் புகழ்கிறோம்" என்று ஆசிரியர் கூறினார். (அயற்கூற்றாக மாற்றுக)


3) மார்னிங் நாஷ்டாவுக்கு இரண்டு தோசைகள் ஹோட்டலில் சாப்பிட்டான். (பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குக)

4) அலறும் மயிலும் கூவும் ஆந்தையும் அகவும் சேவலும் போன்ற இயற்கையின் அழகான ஒலிகளை நாம் நேசிக்கவேண்டும். (ஒலிமரபுப் பிழைகளைத் திருத்துக)

5) கோழிக்குட்டிகளைப் பிடிக்கப் பூனைக்குஞ்சுகள் ஓடின. (பெயர்மரபுப் பிழைகளைத் திருத்துக)

**அஞ்சலட்டையில் எழுதுக.**

வார இதழ் ஒன்றில் படித்த கவிதையை/ கதையைப் பாராட்டி அந்த இதழாசிரியருக்கு அஞ்சலட்டையில் கடிதம் எழுதுக.






**நயம் பாராட்டுக.**

*திங்கள்முடி சூடுமலை*
*தென்றல்விளை யாடுமலை*
*தங்குபுயல் சூழுமலை*
*தமிழ்முனிவன் வாழுமலை*
*அங்கயற்கண் அம்மைதிரு*
*அருள்சுரந்து பொழிவதெனப்*
*பொங்கருவி தூங்குமலை*
*பொதியமலை என்மலையே*

குமரகுருபரர்

## மொழியோடு விளையாடு

### பொருத்தமான வாய்பாடுகளை வட்டமிடுக.

பகலவன் – காசு/கருவிளம்/கூவிளங்கனி

மலர்ச்சி – கூவிளம்/ புளிமா/ கருவிளம்

தாவோவியம் – தேமாங்கனி/ தேமா/ பிறப்பு

வெற்றிடம் – நாள்/ கூவிளம் / புளிமா

பூங்குட்டி – கருவிளங்கனி / மலர்/ தேமாங்காய்

### அகராதியில் காண்க.

வயம், ஓதம், பொலிதல், துலக்கம், நடலை

### வினைத்தொகைகளைப் பொருத்தி எழுதுக.

(வளர்தமிழ், விளைநிலம், குளிர்காற்று, விரிவானம், உயர்மதில், நீள்வீதி, கரைவிளக்கு, மூடுபனி, வளர்பிறை, தளிர்பூ)

1. -----------நிலவுடன் ------------அழகாகக் காட்சியளிக்கிறது.
2. ------------------------ங்கொடிகளும் -----------------ங்களும் மனத்தைக் கொள்ளையடிக்கின்றன.
3. ---------------கள் அனைத்தும் ------------யில் முழுகிக்கிடக்கின்றன.
4. மெல்ல வீசும் -------------றும் ---------------புகழ்பாடுகின்றது.
5. தொலைவில் கலங்-------------த்தின் ஒளி ------------- சுவரை ஒளிரச் செய்கிறது.

### பொருத்துக.

| | |
|---|---|
| நேர் நேர் நிரை | கருவிளங்காய் |
| நிரை நிரை நேர் | கூவிளம் |
| நேர் நிரை | தேமாங்காய் |
| நிரை நிரை | தேமாங்கனி |
| நேர் நேர் நேர் | கருவிளம் |



9th_Tamil_Pages 122-264.indd 229 23-01-2020 20:21:22

### காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

## செயல் திட்டம்

புகழ்பெற்ற கடிதங்களைத் தொகுத்துத் தொகுப்பேடு உருவாக்குக.

### கலைச்சொல் அறிவோம்

எழுத்துச் சீர்திருத்தம்– *Reforming the letters* எழுத்துரு – *Font*

மெய்யியல் (தத்துவம்) – *Philosophy* அசை – *Syllable*

இயைபுத் தொடை – *Rhyme*

### நிற்க அதற்குத்தக

ஒரு நல்ல தோழியாக / தோழராக நண்பர்களுக்குச் செய்ய வேண்டியது..

அ) எழுதுபொருள்களை நண்பர்களுக்குக் கொடுத்து உதவுவது

ஆ) விடுப்பு எடுத்த நண்பர்களுக்கு ஏடுகள் கொடுத்து உதவுதல், வகுப்பில் நடந்தவற்றைப் பகிர்தல்

…………………………………………………………………………….

…………………………………………………………………………….

### அறிவை விரிவு செய்

பெரியாரின் சிந்தனைகள் – வே. ஆனைமுத்து

அஞ்சல் தலைகளின் கதை – எஸ்.பி. சட்டர்ஜி (மொழிபெயர்ப்பு – வீ.மு. சாம்பசிவன்)

தங்கைக்கு – மு. வரதராசன், தம்பிக்கு – அறிஞர் அண்ணா

### இணையத்தில் காண்க

http://www.tamilvu.org/slet/lA100/lA100pd1.jsp?bookid=222&pno=191
http://www.tamilvu.org/slet/lA100/lA100pd1.jsp?bookid=222&pno=192
http://www.tamilvu.org/slet/lA100/lA100pd2.jsp?bookid=180&pno=65
http://www.tamilvu.org/library/l3A00/html/l3A00inp.htm
http://www.tamilvu.org/courses/degree/d031/d0311/html/d03111nd.htm
http://tamil.thehindu.com/opinion/blogs/பட்டாம்பூச்சி–விற்பவன்/article8990805.ece